2018 ஜனவரி 9]

எடுத்து வருகிறது. இந்தக் கல்வி ஆண்டில்கூட மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கக்கூடிய கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வரக்கூடிய காலக்கட்டங்களில் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு உயர் கல்வி தருகின்ற வகையிலே அரசானது முனைப்போடு செயல்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***4283—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணகுடியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், பணகுடி பேரூராட்சியில் இயங்கிவரும் பணகுடி வடக்கு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு 11–1–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட உள்ளது. விரைவில் அங்கு கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

[2018 ஜனவரி 9

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொர்கத்தில் இருந்து வந்து நம்மோடு வாழ்பவை மூன்று என்று சொல்கிறார் கவிஞானி தாந்தே. முதலாவதாக விண்மீன்கள்; இரண்டாவதாக மலர்கள்; மூன்றாவதாக குழந்தைகள். அந்தக் குழந்தைகளுடைய நலனைக் காக்கிற அரசாக இந்த அரசு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படுகின்ற இந்த அரசு, குழந்தைகளின் நலனைக் காக்கிற அரசு என்பதால் கேட்கிறேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த பணகுடியின் வடக்குப் பகுதியிலே ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி. அதேபோல, பணகுடி தெற்கிலும் ஓர் அங்கன்வாடி மையக் கட்டடத்தை குழந்தைகளின் நலன் காக்கிற இந்த அரசு அமைத்துத் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நல்ல பதிலை எதிர்பார்த்து அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், பணகுடி பேரூராட்சியாக இயங்கி வருவதால், பணகுடி தெற்கு மையத்திற்கு பேரூராட்சிப் பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவில் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொங்கல் காலம். கரும்புபோல இனிக்கிற இந்த நல்ல பதிலைத் தந்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தகவல், இந்தச் செய்தி, என்னுடைய தொகுதி மக்கள் நெஞ்சிலே பொங்கலாய் பொங்கும் என்கிற மங்கள வார்த்தைகளை, மஞ்சள் தோய்ந்த வார்த்தைகளைச் சொல்லி, நன்றி கூறி அமைகிறேன்.*

2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

வர்த்தக மையம்

***18960—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பகோணம் பகுதியில் வர்த்தக மையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசு வசம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை குலைந்தாலும், நிலை குலையாத, இந்தியத் திருநாட்டில் பல்வேறு பாரதப் பிரதமர்கள், மாண்புமிகு ஜவஹர்லால் நேரு முதல் இன்றைய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வரை சந்தித்த ஒரே தலைவர், எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எறும்பைவிட சுறுசுறுப்பாக ஓடி, ஓடி உழைத்து எங்கள் கழகத்தை வழி நடத்தும் தங்கமாகத் திகழும் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)